செய்தி வெளியீடு எண்: 168 நாள்: 24.02.11

## சி.என்.என்.–ஐ.பி.என். செய்தி நிறுவனம் தமிழகத்தை இந்தியாவின் சிறந்த மாநிலமாகத் தேர்வு செய்து புதுடெல்லியில் வழங்கிய ‘‘வைர மாநில விருது’’!

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு காண்பித்தார்.

சி.என்.என்.–ஐ.பி.என். என்னும் முன்னணி செய்தி நிறுவனம், 2008ஆம் ஆண்டு முதல் தேசிய அளவில் வளர்ச்சி, சட்டம் ஒழுங்கு, அடிப்படை கட்டமைப்பு போன்ற பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் தகுந்த நடுவர்கள் மூலம் அனைத்து மாநிலங்களையும் மதிப்பீடு செய்து, சிறந்த மாநிலங்களைத் தேர்வு செய்து, அம்மாநிலங்களுக்கு ‘‘வைர மாநில விருதுகள்’’ வழங்கி வருகிறது. 2010ஆம் ஆண்டிற்கு 9 பிரிவுகளின் கீழ் வைர மாநில விருதுகளும், சிறப்பு விருதுகளாக இந்திய அளவில் பெரிய மாநிலங்களில் சிறந்த மாநிலம், சிறிய மாநிலங்களில் சிறந்த மாநிலம் என்ற விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில், தமிழ்நாடு – இந்திய அளவில் பெரிய மாநிலங்களில் சிறந்த மாநிலம் என்ற சிறப்பு விருதினையும்; குடிமக்கள் பாதுகாப்பு, குடிநீர் மற்றும் சுகாதாரம், மகளிர் மேம்பாடு ஆகிய 3 பிரிவுகளில் சிறந்த மாநிலத்திற்கான வைர மாநில விருதுகளையும் பெற்றுள்ளது.

சி.என்.என்.–ஐ.பி.என். செய்தி நிறுவனம் சார்பில் 23.2.2011 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற சிறப்புமிகு விழாவில், இந்த விருதுகளை குடியரசுத் துணைத்தலைவர் மேதகு அமீத் அன்சாரி அவர்கள், தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களிடம் வழங்கியதுடன், முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவிக்குமாறும் கூறினார்.

சி.என்.என்.–ஐ.பி.என். செய்தி நிறுவனம் வழங்கிய இந்த விருதுகளை – மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இன்று (24.2.2011) பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு காண்பித்தார். இந்நிகழ்வின்போது, நிதியமைச்சர் திரு.க.அன்பழகன், துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மத்திய உரத்துறை அமைச்சர் திரு.மு.க. அழகிரி, உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க. பொன்முடி, போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: –
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.